1033 ك

371

REGD. No. M. 2918 ARYA DHARMAM
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா ... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3
ஆறுமாத சந்தா ... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-வருஷ ஆவணி-மீ 7உ 1940-வருஷ ஆகஸ்டு-மீ 22உ | ஸ-33

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா)

இன்னுமும் தப்பவழியுண்டு!! ஜர்மன் அட்டூழியம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமாகிவருகிறது. ஆபத்பந்துவான பகவானை சரணமடைந்தால் நிச்சயம் காப்பாற்றுவார். சென்னை அரசாங்கம் ஆழ்ந்த யோசனை செய்து மதுரை பழனி ஆலயங்களுக்கு ஸம்ப்ரோக்ஷணம் செய்து வேண்டினால் நிச்சயம் ஜயம்கிடைக்கும்.

சாம்பவி ஸஹபதி! பழனியில் நமது சக்ரவர்த்தி நக்ஷத்திரத்தில் ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்யும்படி மதபரிபாலன ஸபையங்கத்தினர் உத்திரவிட்டார். அதுவும் நடக்கிறது. பயன்தெரியவில்லை! காரணமென்ன? தெரிந்ததே!!

இது ஸமயமிது நல்லதல்ல!! ராம்பூர் மன்னர் ராஜீய விஷயத்தில் பிரிட்டிஷ் ஏஜண்டுடன் வேற்றுமை காட்டியதற்காக அவரை ராஜ பதவியிலிருந்து நீக்கி அச்சிறு ராஜ்ய ஆக்ஷியை ஏஜண்டே ஏற்றூர். சிறந்த ராஜ தந்திரிகள் ஜப்பான் குற்றத்தை மன்னித்தது போல் நெருக்கடியான காலத்தில் இச்செயலை ஏற்கார். ஆனுல் மன்னிப்பார்.

நகைநிதி!! வைச்ராய் மனைவி யுத்தத்திற்கு பொருள்தேட இங்ஙனம் ஓர் நிதி ஆரம்பித்துள்ளார்!! இந்திய பெண்களே நகையில் ரொம்ப ஆசையுள்ளவன்று எங்கும் பேசப்படுகிறது!! நாகரிகபெண்கள் விலையுயர்ந்த ஸ்வர்ணம் முதலியவைகளை விட்டு இதைவிட அதிகவிலை கொடுத்து அன்யநாடு பொருள்களையே வாங்குபவர். அவர்கள் என்ன கொடுப்பார்? என்? கைகெடியாரத்தை அளிக்கலாமே!

அமேரி அமர்களம்!! அமெரி ஸபையில் வாயை திறந்தார். கண்டநம்!! மண்டகம்!! அபிப்ராயம்!! பத்தி பத்தியாக வெளியாகின்றன!! இந்தியாவிற்கு காங்கிரஸ் ஒன் ஸ்ப்ரதிநிதி அல்ல! என்று கூறும் அவர் வார்த்தைக்கு தக்க பதில் கூற சிறுபான்மையோரை அது ஸந்தோஷப்படுத்த வேண்டாமா? ஆலயப்ரவேச ஆவேசத்தை விட்டு தார்மிகருடன் ஒத்துழைக்க முன்வருமா?

ஓர் பண்டிதருக்கு ஷஷ்டிபூர்த்தி! பிரும்மஸ்ரீ கடலங்குடி பண்டித நடேச சாஸ்திரிகளவர்களுக்கு அடுத்த மாதம் அறுபதாமாண்டுவிழா நடைபெறுகிறது. அன்னவரது கல்வி அறிவும் தார்மிக தமிழ் உலகிற்கு அவர் செய்துவரும் பெருந்தொண்டையுங் கொண்டாடி பல லௌகிக வைதிகதனவான்கள் அதை சிறப்பாக நடத்தப் போகின்றனர்!! இங்ஙனம் பண்டிதர்களை ஆதரித்து உத்ஸாஹப்படுத்தி அவர் கல்வியை உலகிற்குப்பயன் படுமாறு செய்வது ஆஸ்திகர் கடமையாகும்!!

ஸ்ரீரங்கம்

பிரஸங்கபானு ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளின் பிரஸங்கம்.

சேங்காலிபுரம் பிரஸங்கபானு ஸ்ரீமான் வைத்தியநாத சாஸ்திரிகள் சென்ற ஆடிமீ வியாஸ பௌர்ணமி முதல் அமாவாஸ்யை வரையில் 15 தினங்களில் புது அக்ரஹாரம், ஸ்ரீ சங்கர குருகுல ஆலயம், ஸ்ரீரங்க நாதஸ்வாமி தேவாலயம், ஸ்ரீ அஹோபிலமடம், தென்கலை ஆசாரியாள் மடம் போன்ற பல விடங்களில் அநேக உயர்ந்த விஷயங்களைப் பற்றி வெகு கம்பீரமாகப் பல பிரஸங்கங்களை நடத்தினர் எங்கும் ஏராளமாக ஆஸ்திகர்கள் கூடி கேட்டானந்தத்துடன் ஸ்ரீ சாஸ்திரியாரின் வாக்கு வன்மையையும் பாண்டித்யத்தையும் உபந்யாஸ சைலியையும் மிகக் கொண்டாடினர்கள்.

ஸ்ரீமான் சாஸ்திரிகள் ஸ்ரீ ராமாயணாதிகளில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயங்களை அனுஸரித்து வெகு ஆச்சர்யமாகப் பேசியதைப்பார்த்துஅந்த ஸம்பிரதாயஸ்தர்களான பெரிய ஆசார்யர்களும் வியந்து பேசினர்கள்.

ஜஸ்டிஸ், ஸ்ரீ வரதாசாரியார், ஸர், ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் போன்ற பிரபலஸ்தர்கள் பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரைப் புகழ்ந்து கூறியிருப்பது முற்றிலும் பொருத்தமான தென்றும் யாவரும் அபிப்பிராயப் பட்டார்கள்.

க. நி.

உ

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூகா
சூர்ஞர் கோவில் சிவயோகிகள் மடம்.

1346, 1347 பசலிகள் வரவு சிலவு ஸ்டேட்மெண்டு

வரவு	1346	1347
நஞ்சை ஆதாயம்	1226—3—0	1125—0—0
புஞ்சை ஆதாயம்	377-10—0	400—0—0
சில்லரை ஆதாயங்கள்	16—0—0	
கைமாற்று வரவு	260--10—0	
	1880—7—0	1525—0—0

சிலவு	1346	1347
சிப்பந்திகள்	272—1—0	207—9—4
குருபூஜை சிலவு	107—0—0	176—0—0
அமுதுபடையல்	120—6—6	70—4—1
கிஸ்தி	856—9—7	6ċ6—2—1
ரிபேர் சிலவு	99—7=6	130—4—0
சில்லரை சிலவு	65-12—0	47—4—3
கடன் திருப்பிக் கொடுத்தது	295—2—0	211—0—0
வட்டி கொடுத்தது	24—8—0	
கண்டிரிபூஷன்	39—8—4	
கையிருப்பு		6--8—3
	1880—7—0	1525—0—0

ஆதீனம் சிவாக்ரயோகிகளாகிய மீனுக்ஷிசுந்தர பண்டார சந்நதி,
Trustee

T. S. VISVANTHAN G. D. A. R. A. *Auditor*

அறஞ்செய விரும்பு.

(A. இராமரத்தினம் அய்யர், B. A. B. L.)
திருச்சி.

(முன் தொடர்ச்சி)

லெட்சுமணஸ்வாமி ஒரே கோபமாய் புலிபோல் பாய்ந்து நிற்பதை கண்ட ஸ்ரீ ராமர் அவருக்கு தர்மத்தின் லெட்சணங்களை அடியில் கண்ட சுலோகங்கள் மூலமாக உபதேசித்து சாந்தப்படுத்துகிருர்

ஹெ லெட்சுமணு! உனது பக்தியும் பராக்ரமும் எனக்கெப் போதும் தெரியும் அப்பா! உலகத்தில் தர்மத்திற்குப் பலனுகிய, சௌக்யத்தை அடைவதற்கு தர்மம், அர்த்தம் காமம் என்னும் இம்மூன்றும் காரணமாயிருக்கின்றன. எப்படி நல்ல பார்யை அடையதன் மூலம் இன்பமும், மக்கட் செல்வம் என்ற பொருளும் அடைந்து இல்லற தர்மத்தை ஒழுங்காக நடத்துவதன் மூலம் வீட்டையும் அடைய ஹேதுவாகுமோ, அப்படியே தர்மம் ஒன்றுக்குள்ளேயே புருஷார்த்தங்களும் அடங்கு விடுகிறது. அந்த ஒன்றை கைக்கொண்டாலே மற்ற புருஷார்த்தங்கள் தானுகவே ஸித்திக்கும் ஆகையால் ஹே லெட்சுமணு! வேதத்திலும் சாஸ்திரங்களிலும் கூறியிருக்கும் கர்மாவை செய்ய வேண்டியது அவசியமாயிருந்தாலும் எந்த கர்மாவைச் செய்தால் தர்மம் அர்த்தம், காமம் இம்மூன்றும் ஏற்படுகிறதோ அதைச் செய்வதில் எனக்கு இஷ்டம் கிடையாது. எந்த கர்மாவைச் செய்தால், பொருளும் இன்பமும் சம்பந்தப்படாமல் கேவலம் தர்மம் மாத்திரம் சித்திக்குமோ அதைச்செய்வதில் தான் எனக்கு விருப்பம் ...ச் செய்தால் தர்மமே உண்டாகுமோ அப்படிப்பட்ட காரியத்தையே செய்ய வேண்டும். உலகத்தில் பொருளில் பற்று வைப்பவனும் காமத்தில் பற்றுவைப்பவனும் நிந்தனைக்கு, உள்ளாகிருர்கள் அல்லவா? ஆகையால் பொருளையும் சுகத்தையும் இழந்தாவது தர்மமாகிற பித்ரு வாக்ய பரிபாலனம் என்பதை கைக் கொள்வதில் தான் எனக்கு சம்மதம்''

இந்த வால்மீகி ராமாயண ஸ்லோகங்களே, இந்த உலகத்தில் உத்கிருஷ்டமான வீடு என்னும் மோக்ஷ பதவியை அடைய விரும்பும் புருஷன் அர்த்த பரனுகவோ காம பரனுகவோ ஆகாமல் கேவலம் தர்ம பரனுக மாத்திரமாகி கிருதார்த்தனுக வேண்டுமென்பதற்கு தக்க ஆதாரம் மேலும் ஷெடி சுலோகங்கள் மூல்யமாய் அர்த்தம் காமம் இவைகள் நிலையற்றவையென்றும், அவைகளில் இடுபட்டிருக்கும் புருஷனும் லோகத்தில் நிந்திக்கப்படுகிருர்கள் என்பதையும் நமக்கு விளக்கி காட்டுகிறது.

செல்வத்தை அடைந்தவர்கள் கோபத்தை நீக்கி, ஒழுங்கு பட்டவராய் உறவினர் பலர்க்கும் கொடுத்தலோடு தானம் மறவாது செய்யும் தன்மையராய் இருப்பின் அப்படிப்பட்ட குணம் மேம்பட்டவரை தேவலோகத்திருப்பர் என்று சொல்வார்கள் என்று

“செல்வத்தைப் பெற்ருர் சினங்க
டிந்து செவ்வியராய்பல்கிளையும் வர்டா
மற் பாத்துண்டு, நல்லவாம் தானமற
வாத தன்மையரேல் அஃ தென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு. ஆன்
ருேர் வாக்காலும் உணர்க,

கை பொருள் உண்டாயிருக்கும் காலத்தில் வீணுக மேலும் பணத்தை சம்பாதிப்பதிலே அலையாமல், உள்ள பொருளை லோபத்தால் இறுகி பிடியாதிருங்கள் எவர்க்சும் அன்னம் முதலிய கொடுத்து, இரப்பவர்களுக்கு இல்லை என்னுது கொடுங்கள், இதுதான் பொருளை சம்பாதித்தின் பெருமை. வாழ் நாள் நிலைத்தன்று

“முன்னரேசா, நாண் முனிதக்க மூப்புலி
பின்னரும் பீடழிக்கும் நோயுன
கொன்னே பரவின் மின், பற்றன் மின்,
பாத்துண் மின் யாதுங்,, கரவின்மின்,
கைத்துண்டாம் போழ்து என்று பெரி
யோர்கள் கூறியிருப்பதையும் மற
ந்து, பொருளை பெற்றவுடன், சிறிய
ரே மதிக்கும் இந்த செல்வம் வந்துற்ற
நான்றே வறிய புன் செருக்கு மூடி
வாயுள்ளார் மூகராவார் பறியணி செ
வியுளாரும் பயிறரு செவிடராவர் குறி
பெரு கண்ணுளாரும் குருடராய் முடி
வர் அன்றே,,

என்று யிருக்கின்றவர்களை நாம் அடிக்கடி பாக்கிறேமல்லவா! அப்படிவர்கள் இறந்தவனுக்கு சமானமாகவே கருதப்படுவார்கள் என்று

“உண்ணுன், ஒளிநிருன், ஓங்கு புகழ்
செய்யான் துன்னருங் கேளிர்துயர்
களையான் பொன்னே வழங்கான்
பொருள் காத்திருப்பானேல் அ; ஆ

விழுந்தான் என்று எண்ணப்படும் நாலடியாரில் கூறப்பட்டிருக்கிற இந்த செல்வம் வெறுக்கைக்கு காரணமாதல் பற்றி, புலவர்கள் செல்வம் என்பதற்கு “வெறுக்கை'' என்றே கூறியிருப்பது எவ்வளவு பொருத்த மாயிருக்குறது என்பதை

பெருவறுபந்த மெல்லாம் ...ணர்த்தி
டும் தெய்வ சிந்தை யொருவ மேலிட்டு
நிற்கும், உறக்கமும் இறக்கச் செய்
யும் கருவினுட்புகுத்தும் இன்ன கரிசு
கண்டதனுல் அன்றே விருநிலத்தினுட்
வெறுக்கை என்பனுர் புலமை சான்
ருேர் செய்யுளால் அறிக,

அப்படியேதான் காமபரனும் காமத்திடத்து பெறு மின்பம் நீர்த்துளியை ஒத்திருக்கும், பிரிவாற் பிறந்த துன்பம் கடலை ஒத்திருக்கும், இந்த பரிவாலே பெறுதற்கரிய மக்கள் யாக்கை நீங்குமாயின் இம்மையினும் மறுமையினும் செய்து கொள்ளு நன்மையில்லாமல் இரண்டிடத்தும் அடையக் கூடிய பயனையும் பெருர்

எரிதலைக்கொண்ட காமத்தின் நீர்ப்
புள்ளியற்ருர் பிரிவின்கட் பிறந்த துன்
பம் பெருங் கடலைய தொன்ருல்
உருகி, நைந்து உடம்பு நீங்கின் இம்
மையோடும்மையின்றி யிருதலைப்பய
னும் எய்தார் என்று யாம் கேட்டு
மன்றே

மஹா சிவ பக்தர்களான வாலியும் இராவணனும் காமபரனுக ஆனதால் அன்றே, இராகவனுல் வதஞ் செய்யப்பட்டார்கள்.

அப்படியாவது காமத்தால் அனுபவிக்கப்படும் இன்பம் தான் என்னே? நிலையுற்றதா! மனிதர்கள் இந்த லோகத்தில் காமத்தால் அனுபவிக்கும் இன்பமானது, ஒருவனை ஒரு மதயானைதுரத்த அவன் ஓடிவந்து ஓர் பாழுங்கிணற்றில் மறைய அக்கூபத்தினுள் பாம்பு சீறிகொண்டு இவனை நோக்க, வெளியே காட்டுயானை நிற்க இரண்டிற்கும் நடுவே ஒரு கொடியைப்பற்றி தொங்கும் போது அதை ஒரு எலி அறுக்க அதன் நடுவில் மேலேயிருக்கும் தேன் கூண்டினின்றும் ஒழுகும் மதுவின் ஒரு துளியை நாக்கினுல் நக்குவதுபோலிருக்கும்

“அடுகரி தொடர வீழ, பைந்தலை நாக
ங்கா‌ண விடிகிணற்று சின்வேரைப்
பற்றி நான்றிடவல் வேரை கடுகவோர்
எலியும் வந்து கடித்திட அதினின்
ருேர்க்கு இடைதுளி தேனக்கின்பம்
போலும் இப்பிறவியின் இன்பம்

பல துன்பங்களுக்கு மிடையில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் மனிதர்கள் அனுபவிக்கும் இன்பமானது மரணம் அடுத்திருந்தும் அதற்கப்பட இரையில் திருப்தி கொண்ட பிராணிகளின் இன்பத்தை ஒக்கும்.

“கொண்டு விண் படர்கருடன் வாய்க்
கொடு வரி நாகம் விண்ட நாகத்தின்
வாயினில் வெருண்டவன் தேரை
மண்டு தேரையின் வாயினில் கப்படு
மதுக்கொள் வண்டு தானுகரின்பமே
மானிடரின்பம்''

[விவேக சிந்தாமணி]

மனிதருடைய இன்பமானது ஒருவண்டு ஒரு தவளையின் வாயிலகப்பட, அத்தவளை ஒரு பாம்பின் வாயில் சிக்க அந்நாகம் தவளையை கவ்வியபடியே ஒரு கருடன் வாயில் அகப்பட, கருடன் வாயில் நிகழும், நாகத்தின் வாயில் தவளையும் தவளையின் வாயில் வண்டும் வண்டின் வாயில் அனுபவிக்கும் தேனின் இன்பத்தைப் போன்றதேயாம்.

இப்படி நிலையற்றதும் அழிவுள்ளதும், பிறரால் நிந்தனைக்குள் படக்கூடியதான பொருள், இன்பம், இவைகளின் பேரில் மோகம் கொள்ளாமல், ஒன்றுக்கும் அழிவில்லாததும் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் படக்கூடியதான தர்மத்தையே அறத்தையே கடைபிடிக்க வேண்டும் என்று இதிகாச புராண நூல்கள் மூல்யமாயும் ஏற்படுவதால் தான் அறத்தையே பிரதான்யமாக வைத்து, அதையே செய்ய வேண்டும் என்பதை நம் ஔவை பிராட்டியும் “அறஞ் செயவிரும்பு'' என்னும் நீதி வாக்யத்தால் உலகத்திலுள்ளவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிருர்கள்.

வைவ்ஸ்ராயைக் காண மறுப்பு!

காங்கிரஸ் தலைவரின் போக்கு.

காங்கிரஸ் தலைவர் மௌலானு அபுல்கலாம் அஸாதைக் கண்டுபேச வைஸ்ராய் அழைத்திருந்ததை அவர் ஏற்கமறுத்து விட்டார். வைஸ்ராயைப் பார்ப்பதால் புதிய பிரயோஜன மொன்றும் ஏற்படக் கூடியதாயில்லை யென்று அவர் சொல்லி விட்டார்.

வைஸ்ராய் அறிக்கையைப் பற்றி யோஜிக்க வார்தாவில் 18உ யன்று கார்யக் கமிட்டியை கூட்டியிருக்கிருர்.

V. ஸோமதேவ சர்மா பிரசுரம்,

	ரூ.	அ.	ப.
சங்கரோபதேசரத்னம்.	2	0	0
பத்ம புராணம்.	0	12	0
மார்க்கண்டேய புராணம்.	0	6	0
வாமந புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி.	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவைவர்த்த புராணம்	0	12	0
கூர்ம புராணம்.	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

கிடைக்குமிடம் ஜனுர்த்தன அச்சுக்கூடம்,
லிமிடெட், கும்பகோணம்.

ஸனாதனிகளும் ஹிந்துமஹா ஸபையும்.

சேர்க்கை ஸாத்தியமில்லை.

இரண்டின் நோக்கங்களும் முரண்பாடானவை.

(ராவ்சாகிப் ஸ்ரீ என். நடேசய்யர்)

"தர்ம ராஜ்ய" என்னும், டில்லியிலிருந்து வரும் ஆங்கிலப் பத்திரிகையில், ஒரு நிருபர் ஹிந்து மஹா ஸபைக்கும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்துக்கும், சமரஸம் வேண்டி ஒரு வ்யாசம் எழுதியிருக்கிறார். அவர் இவ்விரண்டு சங்கங்களும் சேர்ந்து ஒரு கட்டுப்பாடுடன் ஒத்துழைத்தால், சம விரோதிகளான காங்கிரஸ், முஸ்லீம் லீக், ஜஸ்டிஸ் கட்சிகளை எதிர்த்து போராடுவதற்கு சௌகரியமாய் இருக்குமென்றும், அதனால் பல அரிய பெரிய காரியங்களையும் சாதிக்கலாம் என்றும் அபிப்பிராயப்படுகிறார்.

இதற்கு தூண்டுகோலாயிருந்த அந்நிருபரின் நோக்கமானது ச்லாகிக்கத்தக்கது. அது முடியுமா என்பதைப்பற்றி சற்று ஆலோசிப்போம்,

ஹிந்து மஹா சபையின் அடிப்படை தத்வங்களும், நோக்கங்களும் என்ன? ஹிந்து தர்மத்தின் லக்ஷ்யங்களை தாங்குவதே தங்கள் நோக்கம் என்று ஹிந்துஸபாக்காரர்கள் பறை சாற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் எதை காப்பாற்றப் போகிறார்கள்? வர்ணாச்ரம தர்மம் ஹிந்து மதம், ஹிந்து கோயில்களில் வழங்கி வரும் பிராசீன பிரார்த்தனை முறை, மதமாற்றம், பால்ய விவாஹ திட்டம், அவைகளில் எதை ஆதரிக்கப் போகிறார்கள்? இவைகளில் ஒன்றாவது இல்லை. ஸபாக்காரர்கள் ஜாதி வேற்றுமை ஒழிய வேண்டுமென்றும், கோவில்களை தீண்டாதாருக்கு திறந்துவிட வேண்டுமென்றும் தீண்டாமை மறையவேண்டுமென்றும், ஹிந்து மதத்தில் சேரவிருப்பமுள்ள அன்னிய மதத்தினர்களை ஆதரிக்கவேண்டுமென்றும், மதம்மாறிப்போய் மறுபடியும் திரும்பி வருகிறவர்களை அனுமதித்தும், பால்ய விவாஹ முறை கட்டாயமாக எடுபடவேண்டுமென்றும் பஹிரங்கமாக தெரிவிக்கிறார்கள். ஹிந்து மதத்தின் அச்சாணி போன்ற மேற்கண்ட திட்டங்கள் போய்விட்டால், ஹிந்து மதத்தில் வேறு என்ன மிஞ்சி இருக்கிறது? பிறகு அதை எப்படி ஹிந்து மதம் என்று சொல்லலாம்? மேற்கண்ட சிறந்த அம்சங்கள்தான் ஹிந்து மதத்துக்கும் மற்ற மதங்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஸீதையில்லாத ராமாயண கதையையும், வெளிச்சம், உஷ்ணம் இல்லாத சூர்யனையும், குளிர்ச்சி இல்லாதசந்திரனையும், எரிக்க சக்தியில்லாத நெருப்பையும் வீச முடியாத காற்றையும், ஒரு சமயம் நினைத்துப் பார்க்கலாம், ஆனால் மேற்கண்ட திட்டங்களில்லாத மதத்தை ஹிந்து மதம் என்று ஒருக்காலும் கருத முடியாது. ஹிந்து தர்ம லக்ஷ்யங்களுக்கு முற்றிலும் விரோதமாயிருக்கும் ஒரு கூட்டத்தினர் சேர்ந்த சங்கத்தை நாம் எப்படி ஹிந்து மஹா ஸபை என்று அழைப்பது? ஹிந்து தர்ம விரோதியான காங்கிரஸுக்கும், அதற்கும் என்ன வித்தியாசம்? தர்ம ஸம்ரக்ஷணத்தை அவர்கள் கையில் எப்படி ஒப்படைக்கலாம்? அச்சங்கம் தன் தற்போதிய நிலையில் தர்மத்தை காப்பாற்றி, எப்படி உஜ்ஜீவிக்க முடியும்?

வாலிவத விஷயம்

(ஸ்ரீ எஸ். ஜி. கிருஷ்ணய்யர் திருச்சி.)

மேல்கண்ட விஷயத்தில் நமது வித்வத் கோஷ்டியில் சந்தேகம் அனாவசியமாய் தோன்றி, சிலகாலமாய் தீர்க்கப்படாததாயிருக்கிறது. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பாக கும்பகோணத்தில் ஓர் வித்வத் சபை நடுவில் இந்த சந்தேகத்தை முன்னிட்டு, சந்தேகம் நிவர்த்தி செய்யப்படாமல் வீண் சண்டையும் சச்சரவும் ஏற்பட்டதாக நாம் ஆர்யதர்மத்தில் வாசித்துப் பார்த்ததும், வாலிவத விஷயத்தில் மறைந்திருந்து அடித்தல் என்பதான தோஷம் கிடையாது என்பதாயும் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி அவதாரம் செய்து, எந்தெந்த தர்மங்களை வேத புராண இதிஹாஸங்களால் உபதேசம் செய்தாரோ, அவ்வுபதேசங்களின்படி உத்தம மனுஷ்ய ஜன்மாவை எடுத்த ஒவ்வொருவரும் நடந்துகொள்ள சாத்தியமென்று தானே ப்ரத்யக்ஷமாய் நடந்து காட்டினார் என்றும், ஸ்ரீ ராகவன் செய்திருக்கிற ஒவ்வொரு காரியங்களிலும் தர்மமா அல்லது அதர்மமா என்று சந்தேகபடவேண்டிய அவசியமே இல்லை என்றும் எழுதி முடித்திருந்தோம்.

இப்பொழுதும் அதே விஷயத்தில் சந்தேகத்தைக்காட்டி இரண்டு வித்வான்கள்' ஒருவர் ஸ்ரீ ராமன் வாலியை "மறைந்து நின்று அடித்தார்", என்று தான் கொள்ள வேண்டுமென்றும், மற்றொருவர் "நேரில் நின்று தான் அடித்தார்", என்று கொள்ளவேண்டுமென்றும், அவரவர் கட்சிக்குத் தக்கபடி பலம் காட்டி எழுதியிருக்கிறார்கள். இது விஷயத்தில் அடியேனுக்கு இரண்டு கட்சியையும் பார்க்கும்பொழுது ஸ்ரீ ராம சரித்திரத்தை பல பேர்கள் ரொம்பவும் சிரத்தையுடன் படிக்கிறார்கள் என்று ஆனந்தம் ஏற்பட்டாலும் ஸ்ரீ ராமாயணத்தை எவ்விதமாய் அறியவேண்டுமோ அம்மாதிரி அறிவதற்கு வேண்டிய பிரயத்தனம் நமது வித்வான்களிடையில் குறைந்துகொண்டு வருவதை கவனிக்கமிக்கவருத்தமாய் இருக்கிறது.

ஷெ நிருபர் ஒரு நியாய வழியை சொன்னால் வர்ணாச்ரம சங்கம் அதை உடனே பின்பற்ற தயாராயிருக்கிறது. இரண்டு சங்கங்களுள் சமரஸம் ஏற்படாவிட்டால், ஒன்றின் வீழ்ச்சிக்கு மற்றொன்று காரணமாயிருக்குமென்று எச்சரிக்கிறார். இரண்டு சங்கங்களுக்கும் அலாதி வித்யாஸங்கள் இருக்கும்போதும், மூலாதார நோக்கங்களில் வேறுபாடுகள் இருக்கும்போதும் ஒத்துழைப்பு முடியாது. ஹிந்து முஸ்லீம் பிரச்னையைத்தவிர்த்து காங்கிரசுக்கும், ஸபைக்கும் சிறிதளவே வித்யாசமிருக்கிறது தற்கால நிலை ஹிந்துமஹாஸபையை ஆதரிப்பதானது ஒருவித நன்மையையும் தராது என்று நான் எச்சரித்ததை மறுபடியும் வற்புறுத்துவதை என் கடமையாக கருதுகிறேன். ஸபைக்கு உதவி செய்தால் நம் கெடுதிக்கு நாமே காரணமாயிருப்போம்.

எண்ணிக்கையில் ஜாஸ்தியாக இருந்தும், கட்டுப்பாடுடன் நம்மை எதிர்க்கும் காங்கிரஸுக்கு பதிலாகவோ, அல்லது அதோடு சேர்ந்தோ நாம் போராடும்படி இருக்கிறது ஹிந்து சபை, காங்கிரஸ் ஏற்கனவே இருந்த அதிகார நிலையைகைப்பற்றுவதற்கு பகீரதப் பிரயத்தினம் செய்கிறது. அப்படி கிடைத்தால் இருபத்திஐந்து,கோடி மக்களாகிய ஸனாதனிகளுக்கு நன்மை தருமா என்பது தெரியவேண்டும். எல்லாம் வல்ல இறைவன் நம்மை சரியான பாதையில் அழைத்து செல்லவேண்டும்!

இந்த வாலி வத விஷயமாய் நாம் அறியவேண்டியது என்னவென்றால் வதார்ஹனாக இருக்கப்பட்டவனை ராஜாவாக இருப்பவன், 'வதார்ஹன்' என்று உறுதி செய்யப்பட்டால், அப்பேர்ப்பட்ட வதார்ஹனை எவ்வித உபாயத்தினாலேயும் வதம் செய்ய வேண்டியது கடமை தர்மம் என்பதுதான். வாலிஸர்வதாவதார்ஹன். இதில் ஒரு வித்வானுக்கும் சந்தேகம் இல்லை. ஸ்ரீ ராகவன், வதம் செய்யவேண்டிய அதிகாரி என்பதிலும் ஒருவருக்கும் சந்தேகமில்லை. இப்படியிருக்க வாலியை ஸ்ரீ ராமன் மறைந்து நின்றுதான் கொன்றால் என்ன? நேரில் நின்றுதான் கொன்றால் என்ன? வதம் செய்யப்பட வேண்டியவன் வதம் செய்யப்பட்டான் என்பது தான் கவனிக்க வேண்டிய தர்மம். ஆனால், 'மறைந்து நின்று அடிக்காமல் நேரில் இருந்து அடித்திருந்தான்' என்று தெளிவாக ராமாயணத்தில் எழுதப்பட்டிருந்தால், வெளியாகும் தர்மம் "மறைந்து இருந்து அடிக்கக் கூடாது நேரில் இருந்து தான் அடிக்கவேண்டும் என்பது முக்யதையை அடையும் அல்லது "நேரில் நின்று அடிக்கவில்லை, மறைந்திருந்து அடித்தான்" என்று தெளிவாக எழுதப்பட்டிருந்தால் மறைந்து நின்று அடித்தல் தோஷம் இலலை என்று ஏற்பட்டுவிடும். ஆகையால் இரண்டு கார்யங்களுக்கும் தனிப்பட்ட இடங்களில் எது தர்மம், எது அதர்மம், என்ற விசாரணை செய்யப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் தேட வேண்டியதே தவிர வாலி வத விஷயத்தில் இந்த தர்மத்தை ஸித்தாந்தப் படுத்தக்கூடியதில்லை.

வதார்ஹனுக்கு அவஸ்தா நியமம் வேண்டியதில்லை. வதார்ஹன் அவசியம் கொல்லப்பட வேண்டும் என்றது உயர்ந்த தர்மம். இதை ஸ்ரீராமன் நடத்தி[illegible] மறைந்து அடித்தது தர்மமாகுமா? என்று கேட்க ஸ்ரீ ராகவன் "நீ வதார்ஹனான மிருகம், உன்னை எவ்விதத்திலும் வதம் செய்ய நான் கடமைப்பட்டவன் ஆகையால் நீ கொல்லப்பட்டாய்" என்று பதில் கூறினார். வாலி ஸ்ரீராமனை பார்க்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. ஸ்ரீ ராமன் மறைந்திருந்தானா அல்லது நேரில் இருந்தானா என்பது தெளிவாயில்லை. தெளிவாய் எழுதியிருக்கவும் முடியாது. அப்பொழுது தான் வதார்ஹன் கொல்லப்படுவதற்கு மறைவு, நேர்என்கிற அவஸ்தாநியமம் கிடையாது என்று ஸ்ரீ ராகவன் சொன்னபதிலுக்கு உணவாகும். மறைவு—நேர் என்ற ப்ரஸ்தாபமே எதற்காக ஏற்பட்டது என்றால் வதார்ஹனை கொல்ல மறைவு—நேர் என்றும் எவ்வித நியமமும் கிடையாது என்பதான தர்மத்தை உறுதிசெய்து சொல்வதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டதே தவிர வேறில்லை அதில் வாதம் ஜயம் இரண்டும் உபகாரமில்லை என்று அடியேன் அபிப்ராயம்.

ஆகையால் இருகட்சிகளில் எந்த கட்சி ஜயித்தாலும், அறியவேண்டிய விஷயத்தை விட்டுவிட்டு இம்மாதிரி விவாதம் செய்வது சமுத்திரத்தில் முழுகி ரத்னங்களை எடுக்க பிரயத்னம் செய்யவேண்டியிருக்க, வெற்றிலை போடுவதற்கு சுண்ணாம்பாக உபயோகப்படும் சிப்பியை எடுத்துவந்து திருப்தியடைவது போலாகும்.

ஸ்ரீ மகாபாரதச்சுருக்கம் ஆதிபர்வம்

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 0 4 0

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தனா பிரஸ்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஸ்ரீ ஆவணி-மீ 7உ

வகுப்புத்தீர்ப்பு அநீதி.

"இதை "தீர்ப்பு" என்று சொல்வதே பொய்யாகும். ஸம்பந்தப்பட்ட கக்ஷியார், தீர்ப்புக் கூறிய மத்யஸ்தரை அங்கீகரிக்கவில்லையாகையால் இது தீர்ப்பாகாது. இது தேசீயத்திற்கும், ஜனநாயகத்திற்கும் விருத்தமானது.

இதை ரத்து செய்ய காங்கிரஸ் கிளர்ச்சி செய்யாதது பெரிய குற்றமாகும். வகுப்புத்தீர்ப்பு ஸம்பந்தமாகவே பிரிவினை யோஜனையும் கிளம்பியிருக்கிறது" என்று காங்கிரஸ் தலைவரும், இந்தியா சட்டஸபை தேசீய காங்கிரஸ் கக்ஷி அதிபருமான ஸ்ரீமான் ஆனே வார்தாவில் பேசியிருக்கிறார்.

தற்போது யுத்த நெருக்கடியும், இந்திய ராஜீயக் கொந்தளிப்பும் ஜனங்களின் மனதை ஆகர்ஷித்து நிற்கிறது. இந்தியாவுக்கு உருப்படியான ராஜீய ஸ்வாதந்திரியம் வாங்கிவிட வேணுமென்பதிலும் அதிக ஊக்கம் காட்டப்படுகிறது. இதையொட்டி வகுப்புவாத பிசாசமானது முன்னைவிட தேசத்தில் அதிகம் தாண்டவமாட ஆரம்பித்து விட்டது. இந்த நிலைமையில் ஏற்கனவே இழைத்துள்ள வகுப்புதீர்ப்பு அநீதியை பொது ஜனங்களும், ஸர்க்காரும் இச்சமயம் மறந்துவிடாமல் கவனத்தில் வைக்கவேண்டிய நிமித்தமாக தலைவர், ஸ்ரீமான் மாளவியாஜியும், ஸ்ரீயுத ஆனேயும் 17உ யன்று வகுப்புத்தீர்ப்புக் கண்டன தினமாகக் கொண்டாடி அதைக்கண்டிக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர். அதை மதித்து தேசமெங்கும் அந்த அக்ரமத்தைக்கண்டிக்க பெரிய பொதுக்கூட்டங்கள் பல நடந்தனவென்று அறிந்து ஸந்தோஷப்பட வேண்டியிருக்கிறது. ஹிந்து ஸமூஹமானது உறங்கிவிடவில்லையென்றும், இந்த தீர்ப்பை ரத்து செய்ய அது உறுதி கொண்டிருக்கிறதென்றும் நன்கு வெளிப்பட்டு விட்டது.

இப்போது புதிதாக இந்தியாவுக்கு ராஜீ ஸ்வாதந்திரியம் வழங்க முயற்சிப்பதிலும், ஏற்கனவே நடந்தவகுப்புத்தீர்ப்பு அநீதியை அஸ்திவாரமாகக் கொண்டே கார்யங்கள் நடைபெறுமென்று ஸமீபகால நிகழ்ச்சிகளால் அறியக்கூடியது. வைஸ்ராய் அவர்கள் முஸ்லீம்களை, முக்யமாக ஜின்னா கோஷ்டியாரை திருப்திசெய்து வசப்படுத்திக்கொள்வதில் தீவ்ரமாக முனைந்திருப்பதைக்காண்கிறோம். அந்த கோஷ்டியாரின் நியாயமற்ற நிபந்தனைகளுக்குக்கூட வைஸ்ராய் இணங்கிவிடுவாரோவென்ற பீதி பலரிடம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

ஸ்ரீமான் பாய்பரமானந்தர், வைஸ்ராய் அறிக்கையை வர்ணிக்கையில் "அது மற்றொரு வகுப்புத்தீர்ப்புக்கு வழிசெய்கிறது" என்று கூறியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

வைஸ்ராய்—ஜின்னா ஸந்திப்பில், ஜின்னாவின் "பாகிஸ்தான்" திட்டமென்கிற முஸ்லீம் ராஜ்ய ஸ்தாபன திட்டத்திற்கு வைஸ்ராய் செவிசாய்த்திருக்கிறாரென்றும் தெரிகிறது. ஆயினும் யுத்தம் முடிவுறும் வரையில் இந்த திட்டத்தை வற்புறுத்தக் கூடாதென்று கனம் வைஸ்ராய் ஜின்னாவை கேட்டுக்கொண்டிருக்கிறாராம். ஆதலால் யுத்தம் முடிந்த பிறகு இந்தியப் பிரிவினைத் திட்ட விஷமத்திற்கு இடமளிக்கப் பட்டிருக்கிறது. பிரிவினை திட்டத்தையே அடியோடு எதிர்த்து நிராகரிக்கவேண்டியதல்லவோ, பொறுப்புள்ள அதிகாரியான வைஸ்ராயின் கடமை? அப்படியின்றி இந்த விஷமத்திற்கு இடம் கொடுத்து பேசுவது தர்மமா?

மேலும் இந்தியா மந்திரியும் முஸ்லீம்களின் நன்மையைப் புறக்கணிக்க முடியாதென்று கக்ஷிபேசி வருகிறார். கவர்ன்மெண்டின் மனப்போக்கு இவ்விதமிருக்கையில், ஹிந்து ஸமூஹமானது பழைய வகுப்புத்தீர்பையோ, புதிய வகுப்புத்தீர்ப்பையோ கவனியாமல் அலக்ஷ்யமாயிருந்து தமது ஸமூஹ நாசத்திற்கு வழிதேடிக் கொள்ளக்கூடாதென்ற கவலையாலேயே ஸ்ரீ மாளவியாஜியும், ஸ்ரீ ஆனேயும் ஹிந்து ஸமூஹத்தை தட்டியெழுப்பியிருக்கிறார்கள்.

17உ யன்று நடத்த ஒவ்வொரு கூட்டத்திலும் வகுப்புத் தீர்ப்பை பலமாகக் கண்டித்ததுடன் இதுவிஷயமாக காங்கிரஸ் நடந்து கொள்ளும் விபரீதப் போக்கையும் யாவரும் பலமாக அங்காங்கு கண்டித்திருப்பது முக்யமாக கவனிக்கத் தக்கது. வகுப்புத் தீர்ப்பால் பெரிதும் பாதிக்கப்பட்ட வங்காளத்தில் அதன் தலைவர்கள் எவ்வித தியாகம் செய்தும் அதை ரத்து செய்யப் பாடுபடுவதுடன், காங்கிரஸையும் கண்டிக்க முன் வந்திருக்கிறார்கள். சென்ற பொது எலெக்ஷனில் வங்காளிகள் காங்கிரஸை ஆதரிக்க மறுத்து விட்டதும் நினைக்கப்படவேண்டும். வகுப்புத் தீர்ப்பு அக்கிரமமானது வெகு விஷமமானதென்று காங்கிரஸ் அறிந்து கொண்டிருந்தும், எல்லா மாகாணங்களும் அடிக்கடி கூட்டம் போட்டு அதை கண்டித்து வருவதை காங்கிரஸ் தெரிந்து கொண்டிருந்தும்கூட அது இன்னும் நியாய வழிக்குத் திரும்பவில்லை. இதனால் காங்கிரஸானது ஹிந்து ஸமூஹத்தின் பிரதிநிதி ஸ்தாபனமல்லவென்றும், அந்த ஸமூஹத்தின் சார்பாகப் பேச அதற்கு உரிமை கிடையாதென்றும் எங்கும் தீர்மானிக்கப்பட்டு, ஸர்க்காருக்கும் இதைத் தெரிவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

தேசத்தில் நியாயத்தை ஸ்தாபிக்கவந்ததாகப் பெருமை பேசும் காங்கிரஸானது இந்த தீர்ப்பு விஷயத்தில், நிஷ்பக்ஷபாதமாகவும், பௌருஷத்துடன், பயங்கொள்ளித்தனமன்றியும் நடந்துகொண்டதாக யாராவது கூறமுடியுமா? ஆதலால் மேலே குறிப்பிட்டபடி ஸ்ரீமான் ஆனே காங்கிரஸ் மீது குற்றம் சுமத்தியிருப்பதில் பிசகு ஒன்றுமில்லை. மேலும் ஹிந்துக்கள் மத்யஸ்தரை அங்கீகரிக்காத நிலைமையில் இந்தத் தீர்ப்பு நம்மீது திணிக்கப்பட்டிருப்பதால் இதை "தீர்ப்பு" என்று பேசவும் நீதி நிபுணர்கள் ஸஹிக்கமாட்டார்கள். ஜனநாயகத்தையும், தேசியத்தையும்பற்றி பறைசாற்றப்படுகையில் இந்த தீர்ப்பு அவைகளை அழிப்பவைகளாக இல்லையாவென்றும் கேட்கிறார்.

ஆகையால் பழைய வகுப்புத் தீர்ப்பு புதைக்கப்படுவதுடன், புதிய விஷமங்களும் ஏற்படாமலிருக்கும் வகையில் தான்புதிய ராஜீய அமைப்பை ஹிந்து ஸமூஹம் ஏற்குமேயல்லாது வேறில்லையென்று முன் ஜாக்கிரதையுடனும் உறுதியுடனும் சொல்லிவிட வேண்டும்.

பிரிட்டன் வெற்றி பெற குடந்தையில் பிரார்த்தனை

இப்போது நடந்துவரும் கோரமான யுத்தத்தில் நமது சக்கிரவர்த்திக்கு வெற்றியேற்படவேண்டியும், பிரஜைகளின் ஆபத்து நீங்கவும், நமதுதர்மம் அழியாமல் நிலைக்கவேண்டியும், மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ ஸ்ரீ உ. வே. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகளவர்களால் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவிலில், "அப்ரதிரத" ஸூக்த ஜபம் ஹோமம் முதலியவைகள் திங்கட்கிழமை முதல் நடத்தப்படுகின்றன. திரிமதஸ்தர்களிலும், சிஷ்டர்களான பல ச்ரோத்திரியர்கள் இதில் கலந்து பிரயோகம் நடத்தி வருகிறார்கள். முடிவு தினத்தன்று ஒரு பொதுக்கூட்டமும் நடத்தப்படும்.

இதன்விவ்ரம் கனம் கவர்னர், வைஸ்ராய் முதலிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு அவர்களும் தங்களுடைய சந்தோஷத்தை கிருஷ்ணமாசார்யாருக்கு அறிவித்துள்ளார்களெனத் தெரிகிறது. (ந. நி.)

அடுத்த காங்கிரஸ் பஞ்சாபில் நடக்குமாம்.

ஏற்கனவே அறிவித்தபடியில்லாமல் அடுத்த காங்கிரஸை பஞ்சாப் மாகாணத்திலேயே நடத்தவேணுமென்று தலைவர் மௌலானா ஸாஹிப் தீர்ப்புக்கூறியுள்ளார்.

இந்தியா மந்திரியும் மறுக்கிறார்

"காங்கிரஸ் இந்தியாவின் பிரதிநிதி ஸ்தாபனமல்ல"

14உ யன்று பார்லிமெண்டில் இந்தியா மந்திரி இந்திய விஷயங்களைப்பற்றி பேசுகையில் வைஸ்ராய் அறிக்கையை ஆதரித்து குடியேற்ற நாட்டந்தஸ்து, நிர்வாஹ ஸபை விஸ்தரிப்பு இவைகளைத் தாங்கிப் பேசினார்.

காங்கிரஸின் பூர்ண ஸ்வேச்சை வேண்டுகோளை நிராகரித்தார். இந்தியா சார்பாகப் பேசக் காங்கிரஸுக்குரிமை கிடையாதென்றார். முஸ்லீம்கள், தாழ்ந்த ஜாதியார், சுதேச ஸம்ஸ்தானங்கள் ஆகியவை காங்கிரஸை அங்கீகரிக்கவில்லையென்றார்.

காங்கிரஸ் இணங்கி வராவிடில் மற்ற கக்ஷியாரின் உதவியைக்கொண்டு வைஸ்ராய் தமது கார்யங்களைச்செய்து கொண்டு போகத்தீர்மானித்திருப்பதாயும் அவர் கூறினார்.

ஸனாதனத்தலைவருக்கு கவர்னர் பேட்டி.

ஸனாதந வித்யாலயத்திற்கு கவர்னர் விஜயம்.

மதுரை

மேன்மைதங்கிய சென்னை கவர்னரவர்கள் 17—7—40 யன்று மதுரைக்கு விஜயம் செய்தபோது தமிழ்ச்சங்கம்ரோட்டிலுள்ள ஸனாதன தர்ம வித்யாலயத்திற்கு காலை 7 மணிக்கு கலெக்டருடன் வந்தார். ராவ் சாஹிப் ஸ்ரீ நடேசய்யரவர்கள் கவர்னரை வரவேற்று வித்யாலயத்தைப் பற்றிய விஷயங்களைத் தெரிவித்தார். இரண்டு மாணவிகள் ஸம்ஸ்கிருதத்தில் கவர்னரை வரவேற்று பாடினார்கள்.

யுத்தம் ஆரம்பித்தது முதல் கடைசி வரையில் நமது மன்னருக்கே வெற்றியேற்பட வேண்டுமென்று பிரார்த்தனை அடங்கிய அழகிய பாடல்களை சிறுமிகள் பாடியதைக் கேட்டு கவர்னர் மிகவும் ஸந்தோஷப்பட்டார்.

கவர்னர் அங்கு வர நேர்ந்ததைப்பற்றித் தமது திருப்தியைத் தெரிவித்து முக்யஸ்தர்களுடன் கைகுலுக்கிவிட்டுச் சென்றார்.

கவர்னருடன் பேட்டி

11 மணிக்கு நமது தலைவர் ராவ்சாஹிப் ஸ்ரீ நடேசய்யரவர்கள் கவர்னரைப்பேட்டி கண்டு அகில இந்திய வர்ணாச்ரச் ஸ்வராஜ்ய ஸங்கத்தின் வரலாறுகளையும், வேலை திட்டங்களையும் விளக்கிக்கூறி, நிர்வாஹ ஸபையில் தார்மிக சமூஹத்தினரின் பிரதிநிதிக்கு இடம் அளிக்கவேண்டிய அவச்யத்தையும் கவர்னரிடம் வற்புறுத்திக்கூறினார். கவர்னர் அன்புடன் அவைகளைக் கேட்டார். யுத்தக் கமிட்டி விஷயமாகவும் பேச்சு நடந்தது.

ந. நி.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க பிரசாரம்

ஜாம் நகர் மன்னரிடம் தூது

ஷை ஸங்கப் பொதுக்கார்யதர்சி அறிவிப்பதாவது:—

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் பிரதிநிதிகளடங்கிய தூது கோஷ்டியொன்று 4உ யன்று ஜாம் நகர் மன்னரை பேடிகண்டது பண்டிததர்மதத்தஜீ சாஸ்திரி, ராவ்பஹதூர் எஸ். எம். பராண்டே, ஜே. பி. தூர்க்கால் எம். ஏ. ஆகியவர்கள் இதில் இருந்தார்கள்.

6உ யன்று அவ்வூர் விநாயகதேவாலயத்தில் பண்டித தர்மதத்தஜி சாஸ்திரிகள் நமது ஸனாதன தர்மத்தின் உயர்வைப்பற்றிப் பேசினார். பொது ஜனங்கள் பெருங்கூட்டமாக வந்திருந்ததுடன், மஹாராணியும், மஹாராஜாவும் அந்தக் கூட்டத்தில் பிரஸன்னமாயிருந்தார்கள்.

மஹாராஜா பேசுகையில், தாம் ஸனாதன தர்ம வழிப்படியே நடப்பதாயும், தமது ராஜ்யத்தில் தர்ம வழிக்கு மாறான கார்யமெதுவும் செய்யப்படாதென்று உறுதி கூறுவதாயும் சொன்னார்

தூது கோஷ்டியினர் ஜாம் நகரிலுள்ள ஸம்ஸ்கிருத பாடசாலையைப் பார்வையிட்டு ஸம்ஸ்கிருத பாஷைக்கு அங்கு காட்டப்படும் ஆதரவை மெச்சினார்கள்

துவாரகைக்கு விஜயம்

பிறகு தூதுகோஷ்டியினர் துவாரகைக்கு வந்தார்கள் 10உ யன்றும், மறு இருதினங்களிலும் அங்கு பொதுக் கூட்டங்களில் வர்ணாச்ரம ஸங்கவேலைகளைப்பற்றி பிரஸங்கித்தார்கள் ஸ்ரீமான் பராண்டே நமது ஸங்கத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவச்யத்தைக் குறிப்பிட்டார்.

ப்ரொபஸர் ஸ்ரீ தூர்க்கால் பேசுகையில் ஹிந்து மதத்தினர் ஒற்றுமையாயிருக்க வேணு மென்றும், 1858ம் வருஷம் முதல் மதநடு நிலைமைக் கொள்கை அநுஸரிக்கப் பட்டு வந்ததையும், இப்பால் அது அலக்ஷ்யம் செய்யப்பட்டு மதத்தில் பிரவேசிக்கும் அபாயம் அதிகரித்து விட்டதையும் குறிப்பிட்டு இதைத்தடுக்க நாம் பெரிய முயற்சி செய்ய வேணு மென்றும் கூறினார்.

துவாரகை தேவாலயம் அசுத்தமாகாமல் காப்பாற்றப்பட்டு வருவதைக்கண்டு ஸந்தோஷம் தெரிவிக்கப்பட்டது.

மைசூர் யுவராஜா 8–உ பட்டம் ஏற்பார்.

காலம் சென்ற மைசூர் மஹாராஜாவிற்கு பிறகு யுவராஜா ஸ்ரீ சாமராஜ உடையார் ஸெப்டம்பர்.மீ 8-உயன்று மஹாராஜா பட்டத்தை அடைந்து ஸிம்மாஸனம் ஏறுவார். இந்தியாகவர்ன்மெண்டார் இதற்கு அனுமதிகொடுத்து விட்டனர்.

மதுரை காங்கிரஸ் கூட்டத்தில் காங்கிரஸார் குழப்பம்.

ஸ்ரீ ஸத்தியமூர்த்திக்கு எதிர்ப்பு

மதுரையில் ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி 18உ யன்று ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார் அச்சமயம் அவர் பிரிட்டன் வெற்றியைப் பற்றியும், காங்கிரஸ்-வைஸ்ராய் ஸமரஸத்தைப்பற்றியும் காங்கிரஸ் கார்யக்கமிட்டி தீர்மானத்தைப்பற்றியும் தமது கொள்கையை விவரித்துச் சொன்னார்.

அச்சமயம் அங்குகூடியிருந்த தீவ்ர காங்கிரஸ் வாதிகளும் வேறுபலரும் சேர்ந்து ஸத்தியமூர்த்தியை எதிர்த்து குழப்பம் செய்தார்கள். மண்மாரி, கல்மாரி பொழிந்தது.

பிரஸங்க மேடைமீது பலர் ஏறிவிட்டார்கள். ஸமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதால் கூட்டம் கலைக்கப்பட்டது. ஸத்யமூர்த்தி முதலிய தலைவர்கள் சிரமப்பட்டு வெளியேறினார்கள்.

திருவாங்கூரில் புரட்சி இயக்கம்

திவான் விளக்கம்

திருவாங்கூர் சட்ட ஸபையில் போலீஸ் மான்ய விவாத காலத்தில் திவான் பேசுகையில், அந்த ஸமஸ்தானத்தில் பாஸிஸ் இயக்கமும் பயங்கர இயக்கமும் ரஹஸ்யமாக நடந்து வருவதாயும், வெடி குண்டுகள் செய்யப்படுவதாயும், வெடிகுண்டு செய்யும் முறை கற்பிக்கப்படுவதாயும், இந்த பயங்கர இயக்கத்தை ஸர்க்கார் அடக்கி நசுக்க முயற்சிப்பதாயும் கூறினார்.

தமிழ்நாடு கமிட்டியின் திரிசமன்

வந்த கடிதத்தை மறைப்பதா?

ஸ்ரீ பிரகாசம் குற்றச்சாட்டு

சென்னை ஜலஸப்ளை விஷயமான பூண்டி திட்ட அஸ்திவார விழா கவர்னரால் நடத்தப்பட்டது. அதற்கு காங்கிரஸ் காரர்கள் போவது கொள்கைக்கு விருத்தமென்றும் ஆதலால் மேயர்உள்பட ஒருவரும் போகக் கூடாதென்றும் ஆந்திரக் கமிட்டி உத்திரவிட்டது. தமிழ்நாடு கமிட்டியோ வென்றால் போகும்படி அநுமதித்தது.

கடைசியாக காங்கிரஸ் தலைவர் அஸாதிடம் போனார்கள். அவர் அந்த வைபவத்திற்குப் போகக்கூடா தென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு ஒரு தந்தியனுப்பினாராம்.

ஆயினும் அந்த தந்தியைமறைத்து விட்டும் லக்ஷ்யம் செய்யாமலும் எல்லோரும் அந்த வைபவத்திற்குப் போனதை ஸ்ரீமான் பிரகாசம் கண்டித்து பத்திரிகைகளுக்கு அறிவித்திருக்கிறார்.

லீக்–வைஸ்ராய் ஸமரஸம்

ஜின்னாவின் இணக்கம்

பம்பாயில் வைஸ்ராயும், ஜின்னாவும் கலந்து பேசியதன் காரணமாக இருவருக்கும் ஸமரஸம் ஏற்பட்டு விட்டதாகத்தெரிகிறது.

யுத்தம் முடியும் வரையில் ஜின்னாவின் பிரிவினை திட்டத்தை வற்புறுத்துவதில்லை யென்று அவர் இணங்கியிருக்கிறாராம். நிர்வாஹ ஸபை விஸ்தரிப்பில் முஸ்லீம்லீக் பிரதிநிதித்வம், குடியேற்ற நாட்டந்தஸ்து யுத்த உதவி முதலிய விஷயங்களில் வைஸ்ராய் அபிப்பிராயத்தை ஜின்னா ஏற்றுக்கொண்டிருக்கிறார். லீக் சார்பாக இரண்டு முஸ்லீம்களின் பெயரை நிர்வாஹ ஸபைக்கு ஜின்னா வைஸ்ராயிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

லீக் காங்கிரஸ் ஸமரஸ முயற்சி?

பிஹாரில் உள்ள பல முஸ்லீம்களும் லீக் கக்ஷியைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸுக்கும் லீகுக்கும் ஸமரஸம் செய்து வைக்க மிகத்தீவ்ரமான ஏற்பாடு செய்து வருகிறார்களாம்.

தொண்டர் ஸ்தாபனங்களுக்கு தடை

இந்தியாவில் பொது ஜனங்களாலும், பொது ஸ்தாபனங்களாலும் நடத்தப்படும் தொண்டர்படைகளுக்கு ராணுவமுறையில், கவாத்து, துப்பாக்கிப்பயிற்சி, முதலியவைகள் கற்றுக்கொடுப்பது சட்டப்படி குற்றமாகு மென்று இந்திய சர்க்கார் ஒரு சட்டமியற்றியுள்ளார்கள்

இதைப்பற்றி நேரு முதலிய காங்கிரஸ் வாதிகள் பலமாக ஆக்ஷேபம் வெளியிட்டு வருகிறார்.

பிழைதிருத்தம்

சென்ற வார பதிப்பில் 7 பக்கம் முதல் பத்தி கடைசி பாராவில் முதல் பதத்தை பராங்முகவதம் என்றும், ஷை பக்கம் 2-ம் பத்தி 2வது பாராவில் கடைசி வரிக்கு முன் வரியில் "ஒரு கூட்டம் மிருகம்" என்று இருப்பதை "ஒரு காட்டு மிருகம்" என்றும் திருத்திப்படிக்கவும்.

ப்ரிட்டிஷ் விமானங்களும் ஜெர்மன் விமானங்களும்.

சண்டையைப்பற்றி டச்சு மாலுமிகள் சொன்னது.

(லண்டன் தந்தி)

வியாழனன்று ஜெர்மன் விமானங்களால் தாக்கப்பட்ட துணைக்கப்பல்களைச் சேர்ந்த வியாபாரக்கப்பல்களிலிருந்த டச்சு மாலுமிகள், ப்ரிட்டிஷ் விமானப்படையின் பெருமிதமான வெற்றியைப்பற்றித் தாங்கள் கண்கூடாகக்கண்ட விவரங்களை உணர்ச்சி ததும்பக்கூறியதாக "டைம்ஸ்" பத்திரிகை எழுதுகிறது. டச்சுக்கடற்கரையைச்சேர்ந்த ஒருவர் கூறியதாவது "எங்கள் துணைக்கப்பல்கள் சுமார் 15 நிமிஷம் தாக்கப்பட்டன. பிறகு பரிட்டிஷ் விமானங்கள் வந்தன. எங்கள் கப்பலிலிருந்து கொண்டே அந்த ஆகாயச்சண்டையைப்பார்த்தோம். அந்தச்சண்டை பார்ப்பதற்கு வெகு விசித்திரமாயிருந்தது. சுமார் 70 ஜெர்மன் விமானங்கள் இருக்குமென்று எண்ணுகிறேன். ப்ரிட்டிஷ் விமானங்கள் அத்தனை இல்லை. ஆனால் ஜெர்மன் விமானங்கள் போதிய அளவு வேகமாய்ச் செல்ல முடியவில்லை. ப்ரிட்டிஷ் விமானிகள் அவைகளைச்சும்பலை அடிப்பது போல் அடித்து வீழ்த்தி விட்டார்கள்."

மற்றொரு டச்சு மாலுமி, "உங்கள் ஸ்பிட்பயர் விமானங்கள் எல்லாம் அவைகளுக்கு மேலே இருந்தன, அவைகளைச்சுற்றியும் அவைகளுக்கிடையிலும் பாய்ந்து தாக்கின. ஒன்றன்பின்னொன்றாக ஜெர்மன் விமானங்கள் பொத்து பொத்தென்று விழுந்தது வேடிக்கையாயிருந்தது" என்றார்.

ஸ்ரீ ஜ்யோதிர்மய மஹாலிங்க ஸ்வாமி நியமாத்யயன பாடசாலை திருவிடமருதூர்

நிகழும் விக்ரம வருஷம் ஆடி௴ 13௳ ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஸ்ரீ ஜ்யோதிர்மய மஹாலிங்கஸ்வாமி கோவிலில் ப்ருஹத்ஸுந்தர குஜாம்பாளுக்கு ஆடிப்பூர உத்ஸவம் 23௳ முடிவு பெற்றது. அந்த சந்தர்ப்பத்தில் காலஞ்சென்ற த்விவேதி பிரம்மஸ்ரீ வேதமூர்த்தி விசுவேசுர கனபாடிகளால் வருஷாவருஷம் நடத்திவந்த ஸாம வேத பாராயணமானது இவ்வருஷமும் அதிக விமரிசையாக நடைபெற்றது. அதற்கு அவருடைய சிஷ்யர்களும் இன்னும் பலவித்வான்களும் வந்திருந்து வேதபாராயணம்நடைபெற்றது. ஷை மஹான் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலையானது ஷையார் தர்மபத்னி லக்ஷ்மி அம்மாளால் ஆஸ்திகாபிமானிகளின் ஆதரவின்பேரில் நடத்தப்பட்டு வருகிறது. சென்ற சித்திரை மாதத்தில், பூனையில் நடத்தப்பட்டு வருகிற வேதசாஸ்திரோத்தாரகசபாவில் நான்கு வித்யார்த்திகள் பரிக்ஷை கொடுத்து சர்டிபிகேட்டும் சன்மானமும் பெற்றிருக்கிறார்கள். வழக்கம்போல் இவ்வருஷமும் மைசூர் புதுக்கோட்டை பரீக்ஷைக்கு சில வித்யார்த்திகள் போகத் தயாராக இருக்கிறார்கள். ஆஸ்திக மஹாஜனங்கள் யாவரும் ஷை பாடசாலையை ஸ்ரீ கனபாடிகள் இருந்தபோது அபிமானித்து வந்ததுபோல் எப்பொழுதும் வேதத்தை அபிவிருத்தி செய்ய உதவினால் பிராம்மண ஸமூகத்துக்கே பெருத்த உபகாரமாயிருக்கும்.

எஸ். விசுநாத சாஸ்திரி.

ஜெர்மனியில் ப்ரிட்டிஷ் விமானிகள் விளைக்கும் சேதம்.

'டைம்ஸ்' பத்திரிகையின் நியூ யார்க் நிருபர் அனுப்பியுள்ள தந்தியாவது:—

ரூர், ரைன் கணவாய்ப் பிரதேசங்களை ப்ரிட்டிஷ் விமானங்கள் மிகக்கடுமையாக வெடிகுண்டெறிந்து தாக்கி வருவது காரணமாக அந்தப் பிரதேசங்களிலுள்ள நகர மக்களை ஜெர்மனியர் வெளியேற்றி வசப்பட்ட ப்ரான்ஸின் கிழக்கு பாகங்களுக்கு அனுப்பி வருவதாக வசப்படாத ப்ரான்ஸில் கூறப்படுகிறது. ப்ரான்ஸில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ள ஜெர்மன் படைகள் முதலியவைகள் மீது ப்ரிட்டிஷ் விமானப்படையினர் தங்கள் தாக்குதலை மிகவும் தீவிரப்படுத்தியிருப்பதாகவும், லபோர்ஜெட் என்னுமிடத்தில் நடந்த வெடிகுண்டு தாக்குதலால் விமானக் கிடங்குகளும் விமான ஸ்தலங்களும் பெரிதும் சேதம் செய்யப்பட்டதாகவும் இரண்டு பேர் மாண்டுபோனதாகவும் ஆறு பேர் காயமடைந்ததாகவும் அதே செய்தி கூறுகிறது.

காரைக்குடி தார்மிக யுவச் சங்கம்

பொதுக்கூட்டம்

இச்சங்கத்தின் சார்பாக ஆடி-௴ 30௳ (14—8—40) புதன்கிழமை நாகநாதபுரம் பெருமாள் கோவில் முன் இரவு 8 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் புருஷர்களும் ஸ்திரீகளுமாக அனேகம் பேர் கூடியிருந்தார்கள். முதலில் கடவுள் வாழ்த்து பாடிய பின் கூட்டத்திற்கு தேவகோட்டை வக்கீல் பிரம்மஸ்ரீ நாகரெத்தின சாஸ்திரிகள் அவர்களைத் தலைவராக ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டது. பிறகு காரியதரிசி சென்ற கூட்டத்தின் நிகழ்ச்சி வாசித்தவுடன் தலைவர் அவர்கள் ஆஸ்தீகம் என்பதைப் பற்றியும், தார்மீகம் என்பதைப்பற்றியும் மிகவும்உருக்கமாகவும் அழகாகவும் ரொம்பவும் விரிவாகவும் பேசினார்கள்.

பிறகு இவ்வூர் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க காரியதரிசி ஸ்ரீ வெங்கடாசாரி அவர்கள் "ஸ்கூல்களில் இங்கிலீஷ் எப்படி முக்கிய பாடமாக இருக்கிறதோ அதே மாதிரி தார்மீக யுவர்களுக்கு முக்கியமாகிய ஹிந்து மத ஆசாரத்தைப்பற்றியும், மதக் கல்வியையும் கட்டாயமாக வைத்து நடத்தும்படி கவர்ன்மெண்டார் அவர்களையும் பள்ளிக்கூடத்தின் அதிகாரிகளையும் கேட்டுக் கொள்வதாக" தீர்மானம் கொண்டுவர அதைத்தலைவர் அவர்களும், கோவிலூர் தார்மீக யுவர் சங்கத்தின் தலைவர் விஸ்வநாதன், இவ்வூர் முத்துப்பட்டணம் சங்கத் தலைவர் ஜகந்நாதன், ஷை காரியதரிசி ராமசாமி, வி. சுப்பிரமணியன் ஆகியவர்களும் தீர்மானத்தை ஆதரித்து விரிவாகப்பேசினார்கள். தீர்மானம் கரகோஷத்துடன் நிறைவேறியது. பிறகு தலைவர் அவர்கள் முடிவுரையில் தார்மீக யுவர்களை நல்வழிப்படுத்துவது புருஷர்களைவிட ஸ்திரீகளுக்குத்தான் முடியுமென்றும் ஆகையால் இதில் ஸ்திரீகள்தான் புருஷர்களைவிட ரொம்பவும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் தகுந்த உபமானங்களுடன் சொற்பொழி வாற்றினார்கள். பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் 10¼ மணிக்கு இனிது நிறைவேறியது.

பி. வி. சுந்தரம் காரியதரிசி

ஸ்ரீ காஞ்சீ ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு வெள்ளிக் கொடை உபயம்

ஸ்ரீ காஞ்சீபுரம் ஸ்ரீ காமாக்ஷி அம்மாளுக்கு வெள்ளிக் கொடை உபயமாக ஸமர்ப்பணம் செய்யவேண்டியதற்கு பிரம்மஸ்ரீ லேட் ப. ஜெ. அய்யுவய்யர் அவர்கள் புத்திரியும் ரிடையர்டு டிஸ்டிரிக்டு முன்ஸீப் பி.எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்களின் பாரியையுமான ஸௌ. சிவகாமி அம்மாளால் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களுக்கு ரூபாய் முன்னூறு அனுப்பப்பட்டு ஸ்ரீ ஸன்னிதானத்தின் ஆக்ஞைப்படி கும்பகோணத்தில் ஸ்ரீமடம் ஏஜெண்டு அவர்களின் மேல்பார்வையில் ஷை வெள்ளிக் கொடை செய்யப்பட்டுள்ளது.

ஷை கொடை ஸ்ரீகாமாக்ஷி அம்மாள் மூலஸ்தானமூர்த்திக்கும் உத்ஸவமூர்த்திக்கும் திருவாசியில் அமர்த்தி இரண்டு மூர்த்திகளுக்கும் உபயோகப்படும்படியான விதமாயும் சிறந்தவேலைப்பாடுள்ளதாயும் வெகு அழகாயும் அமைந்திருக்கிறது. ஸ்ரீமடத்தாரால் ஸ்ரீ காஞ்சீபுரம் தேவஸ்தானத்துக்கு அனுப்பப்பட்டு வாத்திய கோஷங்களுடன் ஷை கொடை வரவேற்கப்பட்டு சாஸ்திரோக்தமாக (8—8—40) கடைசி ஆடி சுக்கிரவார தினம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு ஸமர்பித்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீ அம்பாளுக்கு அபிஷேக அலங்கார அர்ச்சனை நிவேதனங்களும் விமரிசையாக நடத்தினார்கள். கடைசி சுக்கிர வாரமானதால் ஏராளமான ஜனங்கள் வந்து தரிசித்து ஆனந்தித்தார்கள். இந்த தர்மக் கொடையின் பிரதிஷ்டை வகையறா செலவுகளுக்கு ஷையாரால் ரூபாய் முப்பத்தொன்று சமர்ப்பணம் செய்யப்பட்டது. (ந-நி)

ஸ்ரீ வைகுண்டம் கோயில்

நிர்வாஹ ஆபீஸர் மீது வழக்கு

ஸ்ரீ வைகுண்டம் கோயில் எக்ஸிகூடிவ் ஆபீஸராயிருந்த ஸ்ரீமான் பெரியசாமி முதலியார் மீது சென்னை எண்டோமெண்ட் போர்ட் பிரஸிடெண்ட், கோயில் பணங்களைக்கையாடல் செய்ததாகக்குற்றம் சாட்டி வேலையை விட்டு நீங்கி ஸ்ரீ வை சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டில் 408 409 பிரிவு தொடுத்திருந்த வழக்கில் சப்மாஜிஸ்திரேட் மாஜி எக்ஸிகூடிவ் ஆபீஸர் மீது குற்றப்பத்திரிகை வாசித்து மேற்கொண்டு கேஸை விசாரணை செய்து வருகிறார். போர்டாருக்கு பாளையங்கோட்டை வக்கீல் ஸ்ரீமான் ஸி. வி. கோபாலய்யரும் எதிரிக்கு நெல்லை அட்வோகேட் ஸ்ரீமான் ஸாது கணபதி பந்துலுவும் ஆஜராகின்றனர் (ந. வி. நி.)

பம்பாயில் 4 கோடி ரூ யுத்த உதவி.

பம்பாய் நகரத்தில் யுத்த நிதிக்காக 4 கோடி ரூபாய் வஸூலித்து வைஸ்ராயிடம் கொடுக்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொடுக்கும் போது ஸ்ரீ டாடா வைஸ்ராயிடம் ஒரு வேண்டுகோள் செய்து கொண்டார். இந்தியராஜீய நெருக்கடி காரணமாக அதிருப்தியிருப்பதாலேயே இன்னும் அதிக தொகை வசூலிக்க முடியவில்லையென்றும் நெருக்கடியை ஸுமுகமாகத்தீர்த்து வைத்தால் இன்னும் அதிகத்தொகை கிடைக்குமென்றும் அவர் கூறினார்.

சர்க்கரைக்குப் பதில் தேனை உபயோகியுங்கள்.

தேன் என்பது பலவகை சர்க்கரைகள் ஒன்று சேர்ந்து அமைந்த ஒரு பதார்த்தம். ஆகையால் சில பொது விதிகளை அனுஷ்டானம் செய்து கொண்டு சர்க்கரையை உபயோகிப்பது போலவே தேனையும் சமையல் செய்வதிலும் வெகு நாட்கள் சேமித்து வைக்கவேண்டிவரும் பதார்த்தங்கள் செய்வதிலும், தகரத்தில் அடைத்து வைக்கும் பதார்த்தங்கள் செய்வதிலும் தாராளமாக உபயோகிக்கலாம், சர்க்கரை தித்திப்பாக இருக்கிறது. ஆனால் அதில் ஈரச்சத்தோ எவ்வித சர்க்கரைகள் ஜலத்தில் கரைந்தும் சொல்ப திராவகச் சத்தும் கலந்திருப்பதாக தேன் பூச்சி வளர்க்கும் சாத்திரவல்லோருன C. B கூடர்ஹாம் சொல்லுகிறார். ஒருவேளை சற்கரைக்குப்பதில் தேனை உபயோகித்து செய்யப்படும் பதார்த்தங்கள் சர்க்கரையைக்கொண்டு செய்யப் படுவதைக் காட்டிலும் இன்னும் அதிக நாளைக்கு ஈரச்சத்துடன் இருக்கு மென்பது காரணமாயிருக்கலாம். தேனைச்சேர்த்து செய்யப்படும் ரொட்டி, பிஸ்கட், கேக் வகை, தின்பண்டங்கள் வெகுநாள் வரையில் ருசி கெடாமல் பசையுடன் இருக்கும். நாளாக, ஆக ருசி இன்னும் அதிகமாவதாகச் சொல்லப்படுகிறது. தித்திப்புக்காக உபயோகப்படுத்த வேண்டிய சாமான் சொல்பமாக வேண்டியிருக்கிற தின்பண்டங்களுக்கெல்லாம் தேனையே சற்கரைக்குப் பதில் பூராவாக உபயோகப்படுத்தலாம். ஒட்டாவா மத்திய பரீக்ஷார்த்த பண்ணையில் செய்யப்பட்ட பரீக்ஷைகளின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட விஷயங்களிருந்து எடுக்கப்பட்ட அடியிற் கண்ட விதிகளை அனுஷ்டானம் செய்தால் எந்த தின்பண்டத்திலும் தேனை உபயோகித்துக் கொள்ளலாம்.

1. தேனை எப்பொழுதும் அதன் திரவ நிலைமையிலேயே அளந்துகொள்ள வேண்டும். அது கெட்டிப்பட்டோ கட்டி தட்டியோ இருந்தால் அதை வென்னீரில் வைத்து இளகச்செய்து கொள்ளவும்.

2. உபயோகப்படுத்தப்படும் ஒவ்வொரு கோப்பை தேனுக்கும் தின்பண்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும் சற்கரை பாகில் 5ல் ஒரு பாகம் உபயோகப்படுத்தினால் போதும்.

3. ஒரு கோப்பை சர்க்கரையிலுள்ள தித்திப்பும் ஒரு கோப்பை தேனின் தித்திப்பும் ஒன்றுதான்.

4. ஒவ்வொரு $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ தேக்கரண்டி சோடா உப்பு ஒவ்வொரு கோப்பை தேனுக்கும் கலந்து கொள்ளவும்.

5. சோடா உப்பை $\frac{1}{2}$ தேக்கரண்டி முதல் $\frac{1}{4}$ தேக்கரண்டி வரையில் சமயம் போல் அதிகப்படுத்திக்கொள்ளவும்.

6 கேக்குகள் செய்வதில் தேனை உபயோகிப்பதென்றால் அதில் சேர்க்க வேண்டிய தித்திப்புச்சரக்கில் தித்திப்புச் சரக்கைப் பாதியாகச் செய்துகொண்டு பாதி தேனை உபயோகிக்கவும். பழ ரசங்கள் சேர்த்து செய்யப்படும் கேக்குகளுக்கு சற்கரையே சேர்க்கவேண்டிய தில்லை. தேனையே உபயோகித்துக் கொள்ளலாம்.

7 பால் சேர்த்த பணியாரங்களில் தேனை பணியாரங்கள் செய்யும் மாவுடன் கலந்து கொள்ளலாம்.

தேனில் பல தினுசு உண்டு. ஒவ்வொன்றும் ருசி வித்தியாசப்படும். பொதுவாக நிறம் குறையக்குறைய தேனின் ருசியும் குறைவாயிருக்கு மென்று எதிர்பார்க்கலாம்

தகரத்திலடைத்து வைக்கக்கூடிய பதார்த்தங்களிலும் தேனை உபயோகப்படுத்தி பரீக்ஷைகள் செய்யப்பட்டு திருப்திகரமான பலன்கள் கிடைத்திருக்கின்றன. ஐஸ்கிரீம் செய்வதில் சற்கரைக்குப்பதில் தேனை உபயோகிக்கலாம். தேனானது தித்திப்புடன் கூட ஐஸ்கிரீமுக்கு தனிவாசனையும் கொடுக்கும். இன்னும் தேனைக்கொண்டு பலவித மான பண்டங்கள் தயார் செய்து உட்கொள்ளலாம்.

மி. ர்.

பிரிட்டனைப் படையெடுக்க முடியுமா?

ஜெர்மன் கடற்பலம் எவ்வளவு?

திரைமறைவில் நடப்பது ஹேஷ்யம்

(லண்டன் தந்தி)

"லிவர்பூல் டெய்லி போஸ்ட்" பத்திரிகையில் ஒரு ராணுவநிருபர் இவ்வாறு எழுதுகிறார்:—

எதிரியின் உள்நாட்டில் படுகுழிவெட்டிப்பகைவனைவிழ்த்தும் ஜெர்மன் பாச்சா இங்லண்டில் பலிக்கவில்லை. இதுவே ஹிட்லருக்கு ஒரு பெரிய தோல்வி. கட்டுபாடக ஒரே உறுதியுடன் எழுந்து நிற்கும் தேசத்தை அவர் எதிர்க்கவேண்டியிருக்கிறது. அப்படி நேராய் எழுந்து நிற்பவருடன் எப்படிப் போரிடுவது என்று ஹிட்லருக்குத் தெரியாது. விமானபலன் ஒன்றுதானே அவர்கையில் உள்ளது? அதை மட்டும் வைத்துப்போர் நடத்தலாம் என்றால் தோல்விதான் கிடைக்கும். இது கோரிங்குக்கும் தெரியும். கடல் யுத்தத்தில் கடற்படை இல்லாவிட்டால் ராணுவத்தையும் விமானப் படையையும் வைத்துக்கொண்டு நாக்கை வழிக்க வேண்டியது தான் என்று சோவியத் கடற்படை அதிகாரி சமீபத்தில் பகிரங்கமாகக் கூறிவிட்டார். அது கோரிங் கண்ணில் உறுத்தத்தான் செய்கிறது.

இப்போது பிரான்ஸில் ஏதோ கவர்மெண்டு நடக்கும் பிரதேசத்துக்கும் போக்குவரத்துக்கு இல்லாமல் செய்து விட்டார்கள். உள்ளே திரைமறைவில் என்ன தான் நடக்கிறது? பிரான்ஸுக்கு வெளியே துருப்புகள் அனுப்பப்படுகின்றன என்று நமக்குத்தெரியும். இதுதான் இப்போக்குவரத்துத் தடைக்குக் காரணமாயிருக்கலாம் மத்யதரைக்கடலிலும் ஆப்ரிக்காவிலும் இத்தாலி போர் நடத்த ஜெர்மனியர் ஒரு கால் உதவி அனுப்புவதாய் இருக்கலாம். தென் கிழக்கு எல்லைப் புறத்தில் ஜெர்மனி பல துருப்புக்களை அனுப்பிப் பலப்படுத்தியும் வருகிறது. ஹங்கேரிக்கு ராணுவ தூது கோஷ்டி அனுப்பு விஷயமும் பலரால் அனுமானிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், ஐரோப்பியாவில் ருஷ்யப்படைகள் வந்திருப்பதாய் இருக்கலாம். ஆகையால் பிரான்ஸில் இப்போது திரை மூடி இருப்பதன் அர்த்தம் தான் என்ன? ஆகஸ்டுமாதம் பெரியபடையெடுப்பு நடத்த ஹிட்லர் முயன்றுபார்க்கலாம். என்ற ஒரு ஹேஷ்யம் தான் மிஞ்சுகிறது.

ஆகஸ்டில் ஹிட்லர் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் சரி, இப்போது நிலைமை பிரிட்டனுக்கே சாதகமாயுள்ளது என்பதை கீழ்க்காணும் காரணங்கள் விளக்கும்.

ஜூன் மாதத்தில் பிரிட்டிஷ் போர்ப்படைகள் பின்வாங்கி வந்தபோது ஜெர்மனி தொடர்ந்து தாக்க சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. ஆனால் ஜெர்மன் ராணுவம் இச்சந்தர்ப்பத்தை இழந்து விட்டது. இப்போது பிரிட்டனில் மகத்தான படைகளும் தற்காப்புகளும் நிறுவப்பட்டிருக்கின்றன. விமானப்படை தன்னுடைய உயர்வையும், திறமையையும் நிலை நாட்டிவிட்டது. பிரிட்டிஷ் முற்றுகை பூர்ணமாகி, பழைய ஓட்டைகள் அடைபட்டுவிட்டன. அமெரிக்காவிலிருந்து யுத்த சாமான் சப்ளை கிடைப்பதை எதிரிகளால் தடுக்க முடியவில்லை. பிரிட்டனில் உணவுப் பொருள்களும் முன்னைவிட அதிகரித்திருக்கின்றன. பிரிட்டிஷ் கடற்படை சமுத்திரம் எங்கும் ஆதிக்கம் செலுத்துகிறது.

ஹிட்லருடைய படைகளோ, வடகடலிலிருந்து பிரன்ஜில் மலைவரை கடற்கரையோரம் பிரிந்து நிற்கின்றது. நீண்ட கடற்கரையைப் பாதுகாக்கப் போதிய கப்பல்கள் அவரிடம் இல்லை. படையெடுக்கும் துருப்புக்களுக்குத் துணையாகவும் அவைப்போதா. இத்தாலியின் பூகோள நிலைமை ஜெர்மனிக்கு ஒரு தலைச் சுமைதான். இத்தாலியை நாம் தாக்கினால் ஹிட்லர் இத்தாலிக்குத்துணைவராமல் முடியாது மத்யதரைக்கடலில் பிரிட்டிஷ் கப்பல்கள் நின்று இதாலியா சாம்ராஜ்யத்துடன் போக்குவரத்தை நிறுத்தி விட்டன. ஜிப்ரால்டரைப்பிடிக்க ஜெர்மனியால் முடியாது; ஸ்பெயினை அதன் மீதுபாயச் செய்யவும் கூடவில்லை.

உள்நாட்டில் பிரிட்டிஷ் விமானங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு, ஜெர்மன் விமானங்கள் சேர்ந்து படையெடுக்க இயலாமலும் செய்து விட்டார்கள். பிரிட்டிஷ் விமானங்கள் குண்டு வீசுவதிலும் உயர்திறமைகாட்டுகின்றன. வேலையற்றுப்போன ஜெர்மன் ராணுவத்திற்கு எவ்வளவு நாள் ஊக்கம் தளராமல் இருக்கும்? ஹிட்லருக்கு அவர் ஜயித்த நாடுகளும் பால்கன் பிரதேசம் அளவிறந்த தொந்தரவு கொடுக்கையில் பிரிட்டிஷ் ஒற்றுமையும் உறுதியும் வளர்ந்து வருகின்றன எல்லாவற்றிற்கும் மேலே ருஷியா வேறே ஜெர்மனி சுயேச்சையாய்க் காரியம் நடத்திக் கொண்டுபோவதற்குக் குறுக்கே மலை போல அணைபோட்டிருக்கிறது. வேறே இன்னும் என்னவேண்டும்?

தேவகோட்டை

31—7—40 புதன் இரவு பஜனை ரூபமாக தார்மிக வித்யாஸங்க முதற்கூட்டம் ப்ரஹ்மஸ்ரீ வி. எஸ். குப்புஸ்வாமி அய்யர் அவர்கள் ஸர்வஹித ஸாஹித்ய மண்டல ப்ரேரகராகிய ஸ்ரீமான் து. முத்துஸுப்ரஹ்மணிய சர்மா அவர்கள் ஷடி வித்யாஸங்கத்தின் சிறுவர் பகுதியை ஆரம்பித்துமாணவர்கடமை என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினர் மாணவர் எழுவரும் பேசினர்கள் 11—8—40 காலையில் பரமக்குடி ஸ்ரீமான் ஜி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் குருபத்தி என்னும் விஷயமாகப் பல பையன்கள் பேசினர்கள். வந்தனோபசாரம் கூறுகையில் இம்மாதிரி ஸங்கங்கள் விரைவில் நாடெங்கும் ஏற்பட்டு உண்மையறிவு பரப்பப்பட வேண்டு மென்று ஸ்ரீமான் து. மு. சர்மா வற்புறுத்தினர். கூட்டம் இனிது கலைந்தது.

ஓ. கி.

ஸ்ரீ சங்கர குருகுல பத்திரிகை

ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கத்தில் விளங்கிவரும் குரு பக்த சிகாமணி சாஸ்திர பிரஸாரபூஷண, ஸ்ரீமான் டி. கே. பாலசுப்ரமண்ய அய்யர் அவர்களைப்பற்றி அறியாதவர் யாரும் இருக்கமாட்டார்கள். ஸ்ரீமான் அய்யரவர்கள் ஸ்ரீ வாணி விலாஸ அச்சுசாலையை ஸ்தாபித்து கணக்கற்ற கிரந்தங்களை அழகிய ரீதியில் அச்சிட்டு, சாஸ்திரம், காவ்யம் முதலிய நமது சிறந்த கிரந்தங்களுக்குப் புத்துயிர் ஊட்டியவர். இத்தேசத்தில் இதுவரையில் எவரும் செய்யாத அத்புத கைங்கர்யமாக ஸ்ரீ சங்கர கிரந்தாவளியை அச்சியற்றி வெளியிட்டார்.

ஆசார்ய பக்தியின் உருவம்போல் விளங்குமவர் ஸ்ரீ ரங்கத்தில் "ஸ்ரீ சங்கரகுருகுல" மென்ற ஆச்சர்யகரமான ஆலயத்தை நிர்மாணித்து அதில் ஸ்ரீமத் ஆதி பகவத்பாதாளுடைய திருமூர்த்தியைபிரதிஷ்டைசெய்து எழுந்தருளப்பண்ணியிருப்பதுடன், அதன் இரு புறத்திலும், மஹாத்திரிபுரஸுந்தரி, ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ மதாசார்யபாதாள் மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்து நித்யபூஜாராதனாதி வைபவங்களும் வெகு விசேஷமாக நடத்தி வருகிறார்.

அந்த ஆலயத்திலேயே ஆயிரக்கணக்கான புஸ்தகங்களடங்கிய மிகப்பெரிய புஸ்தகசாலை யொன்றும் ஏற்படுத்தியுள்ளார் மேற்படி ஸ்ரீ சங்கர குருகுலமும், புஸ்தகசாலை முதலியவைகளும் இந்தியாவில் மிக அபூர்வமான ஸ்தாபனங்களென்று அவைகளைச் சென்று பார்த்து சிலாகித்த பெரியோர்களும் மற்றவர்களும் கொண்டாடுவதை நாம் அறிந்துள்ளோம்.

இவ்வருஷம் நடந்த ஸ்ரீ சங்கர ஜயந்தி தினத்தில் மேற்படி ஆலயத்தில் குரு குலம் என்ற பெயரால் ஓர் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வேதம், வேதாங்கம் வேதாந்தம் முதலிய வித்யைகள் கற்பிக்க அங்கு சிறந்த ஏறபாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

முன் காலத்தில் நடந்த குருகுல ரீதியை கூடியவரையில் பின்பற்றியே இங்கு வித்யை கற்பிக்கப்பட முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த குருகுலத்தின் அங்கமாக "ஸ்ரீசங்கர குருகுல பத்திரிகா" என்ற ஸம்ஸ்கிருதபத்திரிகையும் நடத்தப்பட்டு வருகிறது. இது மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பிரசுரிக்கப்படுகிறது. சென்ற வருஷ ஸஞ்சிகை நான்கும் பூர்த்தியாக வெளிவந்து விட்டன. இந்த ஸஞ்சிகைகளில், இதுவரையில் எங்கும் அச்சிடப்படாதவைகளான ஸாஹித்யகிரந்தங்கள், சாஸ்திர பிரகரணாதி கிரந்தங்கள் நவீநகாலகவிகளின் ஸரஸமான கவிதைகள், ஸநாதந தர்ம ஸம்பந்தமான கட்டுரைகள், விமர்சங்கள் முதலிய பற்பல விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த முதல் வருஷ ஸஞ்சிகைகளில், பஞ்சரத்ன காரிகா, குமார ஸம்பவசம்பூ டமருகம், முதலிய கிரந்தங்கள் பூர்ணமாக வெளிவந்துள்ளன. நயமஞ்ஜரி, பாலபாரதம் மதூகாவளி, சிருங்கார பிரகாசம் முதலியவைகளும் பிரசுரிக்கப்பட்டு தொடர்ந்து வருகின்றன.

ஆழ்வார்திருநகரியில் மத உபந்யாஸங்கள்.

[நமது விசேஷ நிருபர்]

ஆழ்வார்திருநகரி சநாதனத் தலைவர் ஸ்ரீமத் ஆத்தான் வடக்கு திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள், தமது திருமாளிகை சன்னதிக்கூடம் ஸ்ரீ ஆண்டாள் மனோஹராஹாவில் தினசரி காலை மாலை இரு வேளையிலும் மத சம்பந்தமான பல அரிய ஸத்சம்ப்ரதாய காலக்ஷேப உபந்யாஸங்கள் செய்து வருகிறார். ஸ்ரீ ஸ்வாமிகளின் சிஷ்யர்களும் பக்தர்களும் திரளாக வந்து கேட்டு மகிழ்கின்றனர்.

கோயிலில் விசேஷ உபன்யாசம் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான கோபுரவாசல் முன் மண்டக் குறட்டில் ஆலய நிர்வாஹ ஆபீஸரின் வேண்டுகோளின் பேரில் திருவாடி பூரத்தன்று இளையவில்லி ஸ்ரீசடகோபாசாரியார் ஸ்வாமி (வர்ணாஸ்ரம சநாதன சபா பொக்கிஷதார்) ஸ்ரீ ஆண்டாள் வைபவத்தைப் பற்றி ரமணீயமாக எடுத்துரைத்தார். வர்ணாஸ்ரம தர்ம சபா உபதலைவர் ஸ்ரீ வெங்கடாசார்ய ஸ்வாமி தலைமை வகித்தார். 10-8-40 திருவாடி ஸ்வாதியன்றும் ஸ்ரீபக்ஷிராஜர் (கெருட) மகாத்மியம் பற்றி இளையவில்லி சடகோபாசாரியார் ஸ்வாமியால் ஓர் உபந்யாஸம் செய்யப்பட்டது. பலரும்வந்து கேட்டு மகிழ வெய்தினர்.

ஆடி ஸ்வாதி மஹோத்ஸவம்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான மதிள் மீது எழுந்தருளியுள்ள ஸ்ரீ பக்ஷிராஜர் (கெருடன்) சன்னதி மகோத்ஸவம் சிறப்பாக நடந்தேறின ஸ்வாதியன்று காலை 8 மணி முதல் இரவு வரை பால் பஞ்சாமிர்வனனீர் வகையரு ஸ்ரீ பக்ஷிராஜர்க்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெறுவதும், யாதவர்கள் பக்தி சிரத்தையுடன் பிரார்த்தனை செய்து கொண்டு மேளதாளங்களுடன் கூட்டங்கூட்டமாய் வந்து பால் பழவர்க்காதிகளை கோயிலில் சேர்க்கும் காக்ஷியும் மிக ஆனந்தமாகும் நாஸ்தீக விஷமப்ரசாரகர்கள் அன்று தர்சனார்த்தம் வந்துள்ள ஜனக்கூட்டத்தைக் கவனிப்பின் தங்களது பிரசாரத்தின் பயனற்றதன்மையைத் தெரிந்து கொள்வரென்பது திண்ணம்.

ஸம்ஸ்கிருத ஸாஹித்யத்தின் இனிமையை பிரசாரம் செய்யவும், கரையானுக்கு இறையாகும் அபூர்வ கிரந்தங்களை அதிலிருந்து ஸம்ரக்ஷிக்கவும் ஸ்ரீமான் அய்யர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியை பாராட்டாமலிருப்பது நன்றி கெட்ட செயலாகும். ஸம்ஸ்கிருதத்திற்கு ஸ்ரீ மான் அய்யர் அவர்கள் செய்துவரும் கைங்கர்யங்களைப் பார்த்தால் நம்மவர்கள் என்ன கைம்மாறு செய்ய முடியுமென்று நமக்குப் புலப்படவில்லை. இந்த சங்கர குரு குல பத்திரிகையையாவது யாவரும் ஆதரித்து ஸ்ரீமான் அய்யருடைய அனந்ய பிரயோஜன கைங்கரியத்தைப் பூர்த்தி செய்து வைக்க வேண்டியது ஒவ்வொரு பாரததேச மனிதனின் கடமையாகும். ஸ்ரீமான் அய்யருடைய உத்ஸாஹத்தை நாம் ஆதரவு காட்டி விருத்தி செய்தால் இப்பத்திரிகையை பிரதி மாஸமும் வெளியிட அவர் ஸித்தமாயிருக்கிறார். ஸஞ்சிகையின் அச்சு அழகுமுதலியவைகளை நாம் குறிப்பிடவேண்டிய அவச்யமில்லை ஸ்ரீ வாணீ விலாஸ முத்ரா சாலையில் அச்சாகிறதென்று சொன்னாலே போதுமல்லவா?

இராமேச்வரம்

வாலிபர் சங்கம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஆசாரிய சுவாமிகளின் அனுமதியின் பிரகாரம நடந்து வரும் மகத்தான ஏகாதசி ஆருவது விழா இன்று இரவு 8 மணிக்கு ஷை சங்க காரியாலயத்தில் பிரம்ம ஸ்ரீ ஹரிதாஸ். ஸ்ரீநிவாஸ பர்கவதர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. சங்கங்கள் நடத்த வேண்டியதின் முறைகளை விரிவாகவும் சங்கம் ஸ்தாபிக்க வேண்டிய அவசியத்தையும் முன்னுரையில் கூறியபின், இவ்வூர் ஸப் ரிஜிஸ்தார் பிரம்மஸ்ரீ கே.ஏ. சுபபய்யா அய்யர் அவர்கள் (பி.ஏ.) அவர்களால்ஸ்ரீ. சேது மகிமை உபாக்யானம் என்னும் விஷயத்தைக் குறித்து அனேக மேற்கோட்பாடுகளுடன் வெகு அழகாகவும் உருக்கமாவும் உபன்யசிக்கப்பட்டது. மேல், சங்கத் தலைவர் மு. வ. கோபால சாஸ்திரிகள் அவர்களால் மதத்தின் பெருமையையும் சங்கத்தின் சட்ட திட்டங்களையும் எடுத்து கூறப்பட்டதின் மேல் பி. மகாதேவ சாஸ்திரியள் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சங்க மெம்பர்களால் வாழ்த்து கீதம் பாடப்பட்டு இசுவர தீபாராதனையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

மு. வ. கோபாலசாஸ்திரியள்.

ஸ்ரீமத் ராமாயண ஸீரீஸ்

மதுரை

மதுரை வடக்கு வெளிவீதி சுகுண விலாஸ் முன்பாக அமைத்திருக்கும் கொட்டகையில் சென்ற நான்கு மாதங்களாய் திப்பிராஜபுரம், ப்ரும்மஸ்ரீ தேவராஜபாகவதர் அவர்களால் ஆரம்பித்து நடத்தப்பட்டுவரும் ஸ்ரீமத் ராமாயணத்தின் கடைசி பாகமாகிய ஸ்ரீ ராமச்சந்திர பட்டாபிஷேக சரித்திரம் ஆவணி-மீ 7-வ (22—8—40) இரவு 9 மனிக்கு நடக்கிறது. ஸ்ரீ பாகவதர்கள் நடத்திய கதைகள் எல்லாவற்றையும் ஆயிரக்கணக்காண பக்தர்கள் கேட்டு ஆனந்த ப்ரவசராகியிருக்கிறார்கள். பாகவதர்களின் ப்ரவசன ஸாமார்த்தியமும் சங்கீத உயர்வும் பக்கவாத்தியங்களின் அனுகூலமும் எல்லோராலும் மெச்சப்பட்டு கௌரவிக்கப்படுகிறது.

பண்டிதர்கள் பாமரர்கள் எல்லோரும் பரவசமாகும்படி கதைச்சொல்லக்கூடிய சக்திவாய்ந்தவர். ஒவ்வொரு கதைக்கும் திரளாக ஜனங்கள்வந்து கேட்கிறார்கள். அவ்விதமே ஸ்ரீ ராமபட்டாபிஷேக கதை கதைக்கும் எல்லோரும் விஜயம் செய்து நடத்தி, சன்மானிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

சுகுண விலாஸ் புரோப்ரைட்டர் ஸ்ரீமான் ஏ.என் ராமய்யர் அவர்களின் சிரத்தையும் பக்தியும் போற்றத்தக்கது.

ஷை பாகவதர் அவர்கள் நம் ஸநாதன தர்மத்துக்கு அரும்பாடுபட்டு உழைத்து வரும் பெரிய பக்தர். அகில பாரதீய வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்க அத்யக்ஷர் ஸ்ரீ. என் நடேசய்யர் அவர்கள் அனுமதிப்படி தர்ம ப்ரசாரத்தை தன்னுடைய முக்ய கொள்கையாக கொண்டு எந்த இடத்திலும் ப்ரசாரம் செய்து வருபவர். ந. கி.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S, Kalyanasundaram,